**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 711/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | திரு. செல்லமுத்து |
| Father's Name/Husband Name: | திரு. ரெங்கசாமி |
| Village : | கீழப்பெரம்பலூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.02.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரி சேதுராமன் ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது கீழப்பெரம்பலூர் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ரம்யாவைத் தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அதனை குன்னம் காவல் நிலையத்தில் சில மாதங்களுக்கு முன்பு செய்து கொடுத்தேன். எதற்காக செய்தேன் என்றால் எனது அண்ணன் மகள் கொடுத்த புகாரில் போலிசார் கையெழுத்து வாங்கனிர்கள். அந்த **பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 27.05.2025ம் தேதியன்று போலிசார் என்னை விசாரணை செய்த போது அன்றைய தினம் காலை 9 மணியளவில் வழக்கு சம்பவம் இடமான கிழக்கு தெருவில் போலிசார் விசாரணை மேற்கொண்டு அங்கு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார்

செய்தார் என்றும் அந்த பார்வை மகஜரில் சம்பவயிடம் சாட்சியாக முதல் கையெழுத்து செய்தேன் என்று போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சில மாதங்களுக்கு முன்பு நான் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அரசு தரப்பில் பிரிவு 161(3) வாக்குமூலத்தை வைத்து என்னிடம் கேள்வி கேட்டதால் தான் ஆமாம் என்று சொன்னேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.